மலரும் புத்தாண்டை
மங்களமாய் கொண்டாட
மங்கையரே நாடுங்கள்:
S. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13-14,
மேஜர் சோதியா தெரு,
(பெரிய கடை)
யாழ்ப்பாணம்.
[34119]

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

நம்பிக்கையூட்டும் நத்தார் பெருநாளை
நன்றே கொண்டாடிட
நல்ல புடைவை இனிசுகளுக்கு
நம்பிக்கையோடு
நாடுங்கள்:
S. லிங்கநாதன்
வண்ணச் சோலை
13-14,
மேஜர் சோதியா தெரு,
(பெரியகடை)
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 04 திங்கட்கிழமை (19 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 23

# யுத்த நிறுத்தம் மற்றும் பாதை திறத்தல்:
# இரண்டும் குறித்தே இம்முறை பேசப்படும்

## அரச குழுவின் வருகை குறித்து இன்று அறிவிப்பு வெளியாகலாம்

கொழும்பு, டிசம்பர் 19

ஸ்ரீலங்கா அரசதரப்பு பிரதிநிதிகள் குழுவுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையில் அடுத்துவரும் நாட்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பேச்சுகளின் போது மோதல் தவிர்ப்பு மற்றும் யுத்தநிறுத்தம், வடபகுதிக்கு பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறத்தல் ஆகிய இரு விடயங்கள் குறித்து மட்டுமே பேசப்படும் என செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

பேச்சு நடத்துவதற்கு அரசுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் புறப்படவிருப்பது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று கொழும்பில் வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுத் தூதுக்குழு நாளை யாழ். செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் கொழும்புப் பத்திரிகைகள் நாளை மறுதினமே குழு யாழ் செல்லும் என ஊகத்துடன் கூடிய செய்திகளை வெளியிட்டதாக பி.பி.ஸி. குறிப்பிட்டது.

விடுதலைப் புலிகளுடன் முதற்கட்டப் பேச்சு நடத்த யாழ். சென்ற அதே அரசுத் தரப்புக் குழுவினரே இம்முறையும் யாழ். செல்வர் என

[4 ஆம் பக்கம் பார்க்க]

முக்கிய தினங்களில்

## கேதீஸ்வரம் சென்று வழிபட படையினர் அனுமதி

யாழ்ப்பாணம், டிச. 19

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு முக்கியஉற்சவதினங்களில் மட்டும் சைவமக்கள் சென்று வழிபடுவதற்குப் படையினர் இப்போது அனுமதி வழங்கியுள்ளனர் என்று அறிய வந்துள்ளது.

திருக்கேதீஸ்வரம் ஆலயம் இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதியில் அமைந்துள்ளதால், இதுவரை பக்தர்கள் அங்கு சென்று ஆலய வழிபாடு செய்வது முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

இப்போது முக்கியமான உற்சவ தினங்களில் அடியார்கள் படையினரின் பாதுகாப்புடன் வாகனங்களில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆலயத்தைச் சுற்றி புதர் மண்டிக் கிடப்பதாகவும் சிறிய மரங்களும் வளர்ந்து காணப்படுவதாகவும் —

ஆலயத்தின் மண்டபங்களை மூடும் அளவுக்கு மரங்கள் வளர்ந்துள்ளதாகவும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

இம்மாத இறுதியில் கலைப்பு

## உள்ளூராட்சி சபைகளுக்கு பெப்ரவரியில் தேர்தல்

கொழும்பு, டிச. 19

இம்மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவுடன் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் கலைக்கப்படலாம் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா இது தொடர்பான வர்த்தமானி பிரகடனத்தை இம்மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவு வெளியிட திட்டமிட்டுள்ளார் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கலைக்கப்படும் பிரதேச சபைகள், மாநகரசபைகள் நகரசபைகளுக்கான, புதிய தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரி நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளன.

இத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடமிருந்து வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் கடைசித் திகதி அடுத்த மாதம் 12 ஆம் திகதியாக இருக்கும் என்று எதிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்தில்

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் 500 பேருக்கு நியமனம்

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு சுமார் 500 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நியமனம் பெறவிருக்கின்றனர்.

ஏற்கனவே பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்கள் இம்மாத ஆரம்பத்தில் இருந்து பதவி நீக்கப்பட்டிருந்தனர்.

புதியநியமனம் பெறவிருப்பவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இவ்வாரம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்வி வலயம் ஒன்றில் சுமார் 200 பேரும் —

கல்வி வலயம் இரண்டிற்கு சுமார் 300 பேரும் — பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெறவிருக்கின்றனர். (ஐ-3)

## கோமாரி கப்பலின் அதிகாரி திடீர் சுகயீனம்

### மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதி

வடமாராட்சி, டிச. 19

பருத்தித்துறைக்கு வந்துள்ள ''கோமாரி'' கப்பலில் பணி புரியும் அதிகாரி ஒருவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஏ.எம். ஆரிய சிங்கா (வயது 34) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவராவார்.

இவரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் கப்பலில் இருந்து கூட்டிவந்து நேற்று முன்தினம் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். (ஐ-173)

## ஓஷன் றேடருக்கு பதிலாக புதிய கப்பல் சேவையில்

யாழ்ப்பாணம், டிச. 19

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கும், இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்களுக்கும் உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல அரசு புதிய கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பணியில் முன்னர் ஈடுபட்டிருந்த 'ஓஷன் றேடர்' கப்பல் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் தாக்கப்பட்டதையடுத்து இந்தப் புதிய கப்பலை அரசு சேவைக்கு அமர்த்தியுள்ளது.

மன்னார்ப்பகுதி மக்களுக்கு அவசர தேவையான உணவுப் பொருள்கள் கொழும்பில் வைத்து இக்கப்பலில் தற்சமயம் ஏற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வாரமளவில் இக்கப்பல் மன்னாருக்குச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-3]

## புலிகள் கொழும்பில் புகுந்து விமானங்களை கடத்தலாம்!

### அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிச. 19

விடுதலைப்புலிகள் கொழும்புக்குள் ஊடுருவி விமான நிலையங்களினுள் ரகசியமாக புகுந்து விமானங்களை கடத்திச் செல்லும் சாத்தியம் இருப்பதாக தேசப் பிரேம பிக்குகள் முன்னணி அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக கொழும்புக்கு வரும் வடபகுதி மக்களுடன் புலிகளும் கொழும்புக்குள் ஊடுருவ வாய்ப்பு உள்ளது என்றும்—

எனவே கொழும்பு நகரின் பாதுகாப்பை தீவிரப்படுத்துமாறும் பிக்குகள் முன்னணி அரசிடம் கேட்டுள்ளது.

விமானம் ஓட்டும் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகள் சிலர் அண்மையில் பலாலி விமான தளத்தினுள் ஊடுருவி ஹெலிக்கொப்டர் ஒன்றை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தற்கொலைத் தாக்குதலில் இருந்து தப்பினாராம் இராணுவத் தளபதி ஜெரி!

கொழும்பு, டிச. 19

விடுதலைப்புலிப் போராளியின் தற்கொலைத் தாக்குதலில் இருந்து இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டிசில்வா கடந்த மாதம் அதிஷ்டவசமாக உயிர்தப்பினார் என்று ''சண்டேலீடர்'' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர்களில் ஒருவரை படையினர் சுட்டுக் கொன்று சடலத்தை இழிவான முறையில் நடத்திய சம்பவத்துக்கு பழிவாங்கும் நோக்கமாக இத் தாக்குதலை நடத்த புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தளபதி தனது இல்லத்தில் இருந்து இராணுவ அலுவலகத்துக்கு செல்லும் வேளை வெடிகுண்டுகளுடன் வாகனத்தை ஓட்டி வந்து ஜெரிடி சில்வாவின் வாகனம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி தேர்தல் ஆட்சேபனை மனு சட்டப்பிரச்சினையால் நிராகரிப்பு

கொழும்பு, டிச. 19

வன்னி மாவட்ட நாடாளுமன்றத் தேர்தல் முடிவை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்திருந்த ஆட்சேபனை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

கடந்த ஓகஸ்ட் தேர்தலில் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்ட எஸ். என். ஜி. நாதன் தாக்கல் செய்த இம் மனுவை நீதியாசர் டாக்டர் ரணராஜா விசாரித்தார்.

ஆட்சேபனை மனுவை சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 10 நாட்களுக்கு இடையில் மனுதாரர் தாக்கல் செய்யத் தவறி விட்டார் என்ற பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்றுக் கொண்டு மனுவைத் தள்ளுபடி செய்வதாக நீதிய

(3 ஆம் பக்கம் பார்க்க)

டிசம்பர் 25 முதல்

## திருமலை, வவுனியா, மட்டக்களப்புக்கு சர்வதேச தொலைத் தொடர்பு வசதி

திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் சர்வதேசத் தொலைத் தொடர்புகள் பிரிவு அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் பாதுகாப்பைக் காரணம் காட்டி [illegible] கிழக்கு மாகாணத்தில் சர்வதேச தொலைத் தொடர்பு பிரிவை அமைக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுடன் அமைச்சு அதிகாரிகள் நடத்[illegible] குறிப்பிட்ட நான்கு [illegible] தொலைத் தொடர்பு சேவையை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான உபகரணங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நத்தார் முதல் இச்[illegible] சேவையை மக்கள் பயன்படுத்தக் கூடிய விதத்தில் வேலைகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை மீறல் வழக்கில்

## ஜெனரல் ஹமில்டன் உயர் நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, டிச. 19

கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றின் விசாரணையின் போது பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நேரில் ஆஜரானார்.

அதனால் நீதிமன்றத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

15. 2. 1991 இல் மனுதாரரான லக்ஷ்மண் போரகே பொலீஸ் வாகனம் ஒன்றில் கூட்டிச்செல்லப்பட்ட பின்னர் காணாமற் போனது தொடர்பாக இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் கடத்திச் செல்லப்பட்டது உறுதிப் படுத்தப் பட்டுள்ளது. இதுகுறித்து பாதுகாப்புச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியும் அவரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்று சட்டத்தரணி முந்திய தவணையில் தெரிவித்ததை அடுத்து, பாதுகாப்புச் செயலாளரை நேரில் ஆஜராகும்படி நீதியரசர் மார்க் பெர்னாண்டோ பணித்திருந்தார்.

அதற்கிணங்கவே வனசிங்கா ஆஜரானார். (எ)

## கடற்படையின் தரை இறக்கும் கப்பல் பழுது

கொழும்பு, டிச. 19

ஸ்ரீலங்காவின் கடற்படையின் தரையிறக்கும் கப்பல் ஒன்று பழுதடைந்த நிலையில் கொழும்பில் தரித்து நிற்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவப் பயிற்சி பெற்ற 150 பொலீஸாரை மன்னார் தீவுக்கு கொண்டு செல்லும் போது அத்தரையிறக்கும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## காவலிலுள்ள 800 தமிழரை விடுவிக்கக் கோரிக்கை

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 800க்கு அதிகமான தமிழர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி பதில் சட்டமாஅதிபர் ஜனாப் ஷிப்லி எம். அஸீஸுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 400 தமிழர்களைத் தவிர, இன்னும் 404 தமிழர்கள் பொலீஸ் நிலையங்களிலும், சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 404 பேர்களில்—

யாழ். மாவட்ட களுத்துறையில் 47 தமிழர்கள் காவலில் உள்ளனர். வெலிக்கடைச் சிறையில் 9 பேர், மகஸின் சிறையில் 239 பேர், மட்டக்களப்பு சிறையிலும் பொலீஸ் நிலையத்திலுமாக 98 பேர், திருகோணமலைச் சிறையில் 11 பேரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவல்களை பதில் சட்டமா அதிபரிடம் கடந்த புதன்கிழமை கிழக்கு மாகாணத் தமிழ் எம். பி ஒருவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட கைதி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அரச ஊழியரின் நட்டஈடு 50 சத வீதம் அதிகரிக்கும்

கொழும்பு, டிச 19

வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நட்ட ஈட்டுக் கொடுப்பனவு 50சத வீதமாக அதிகரிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

12½சத வீத நட்ட ஈட்டுக் கொடுப்பனவே யாழ் மாவட்ட அரச ஊழியர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்தன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் வன்செயல் நடவடிக்கைகளால் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக போதிய ஆவணங்களைசமர்ப்பிக்கத் தவறியதன் காரணமாகவே 12½சத வீத நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்ததாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

அதிகரிக்கப்படும் நட்ட ஈட்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இளம் பெண் கைது!

யாழ்ப்பாணம், டிச 19

கொழும்பு செல்வதற்காக வவுனியாவில் தங்கிநின்ற முழங்காவிலைச் சேர்ந்த உமாபதிசிவம் கலைமதி (வயது 23) என்ற இளம்பெண் அங்கு வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

1995 நாட் கலண்டர்கள், மாதப்படக் கலண்டர்கள், விற்பனைக்குண்டு. கிறிஸ்தவ படங்கள் பலரகங்கள் உண்டு. வியாபாரிகள் தங்கள் விலாச மிட்டு பதிப்பித்தும்கொள்ள லாம். விசேஷ கழிவுண்டு. குறைந்தளவே கையிருப்பில் உள்ளது. மகாலக்சுமி அச்சகம், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (8084)

Honda ஜெனரேட்டர் (1,500 Watts) Sony T. V. 2093 Toshiba Video Deck Sansui Amplifier (100Watts) RXCW 25F Double Cassette Set ஆகியன விற்பனைக்கு உண்டு. டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-15)

இந்தியன் பிறிமியர் கிறைண்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிந்துஜா அரைக்கும் ஆலை, கே. கே. எஸ். வீதி, நச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி-10059)

'மிற்றா' (Mitta) ரக 'போட்டோஸ்ரற்' இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு. 23ஆம், 24ஆம் திகதிகளில் நேரில் தொடர்பு கொள்ளவும். விலாசம் 12/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (34246)

வெள்ளடியன் சேவல்கள், பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. இல. 3, சீனியர்லேன் (தட்டாதெரு சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (34248)

றேடியோ, சுவர் — கைக் கடிகாரங்கள், சில்வர் பிளாஸ்ரிக் பொருள்கள், பாடசாலை — தையல் உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: ஜெயா அழகு மாடம், இல. 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9837)

**கோழிக்குஞ்சு விற்பனை**

Prima Broiler குஞ்சுகள் Christombu Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் பதிவுசெய்து 21-12-94 புதன் கிழமை பெற்றுக்கொள்ள லாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, யாழ்ப்பாணம். (34249)

**புலமைப் பரிசில் - 95**

யாழ். Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தின் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். (34241)

**O/L DEC. 94**

நடைபெற்ற ஆங்கில வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். கூடுதல் பிரதிகள் எடுப்பவர்களுக்கு 25 வீதம் கழிவு வழங்கப்படும். Bond யாழ்ப்பாணம். (8090)

**அப்பியாசக் கொப்பி**

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

**மணமகள் தேவை**

38 வயது, விசாகம் 3ஆம் பாதம், 48 கிரக பாவம், 15 வருட ஜேர்மன் பிரஜாவுரிமையும், 5 வருட அமெரிக்கா விசாவும் யாழ். உள்ளவருக்கு மணமகள் தேவை. தொடர்பு: மதிமுகன், பழைய கண்ணாடித் தொழிற்சாலை, கோப்பாய் கிராம சபைக்கு முன்பாக. (34231)

**ரி. வி. டெக் திருத்துதல்**

சகல றேடியோக்கள், ரி. வி. டெக், எல்லாவிதமான மணிக்கூடுகளையும் பழுதுபார்த்துக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டை. (சி -9911)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 02 — 06 — 1903

உதிர்வு: 20 — 11 — 1994

**அமரர் சீனியர் பொன்னம்பலம்**
(முத்தையா)
(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

திதி: 19 – 12 – 1994

அன்பிலே சிறந்தவராய், பண்பிலே உயர்ந்தவராய், நேர்மை தவறாதவராய், கடமை வீரராய் வாழ்ந்து எம்மை வழி நடத்திய அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்தாலும், எம் இதயத்தில் என்றென்றும் வாழ்வீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில் (34242)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 07 — 11 — 1922

உதிர்வு: 19 — 11 — 1994

உயர்திரு
**வேலுப்பிள்ளை இராசையா**

எங்கள் அன்புத் தெய்வமே! பண்பின் சிகரமே!
குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்தீரே
ஈடு செய்ய முடியாத உங்கள் பேரிழப்பை
நம்ப மனம் மறுக்கிறது
மாதமென்ன வருடமென்ன எத்தனையுகம் –
சென்றாலும்
உங்கள் பிரிவை ஆற்ற முடியாது
உங்கள் பிரிவால் சிந்தும் கண்ணீரையே
காணிக்கையாக்கி உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மகள் (இந்திரசித்து மகாலட்சுமி),
பேரப்பிள்ளைகள்.

லலிதா அணிகலப் பூங்கா,
213, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம். (34238)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 29 — 09 — 1905

மறைவு: 19 — 12 — 1993

திருமதி
**றோசலின் அன்னபூரணம் திருராசசிங்கம்**
(பூரணக்கா)

பலர் போற்ற வாழ வைத்து, இன்று விண்ணிலிருந்து ஆசீர்வதித்து நிற்கும், எங்கள் ஆருயிர் அம்மாவை நீங்கா நினைவுடன் நினைவு கூருகின்றோம். எங்கள் அம்மாவ! நீங்கள் தேவ சந்நிதியில் இன்பமாக வாழ அன்பான இயேசு நாதரைப் பிரார்த்திக்கின்றோம்.

''பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம், பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே''

நீதிமொழிகள் 17:6

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரிகள், மைத்துனி மற்றும்
உற்றார், உறவினர்கள்.

''இராஜேந்திர வில்லா''
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

## A/L 94/95

துரித மீட்டல் வகுப்பு
23 – 12 – 1994 முதல்

**தாவரவியல் ஐங்கரநேசன்**
**யூனிவேர்சல்**
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

* முழுப் பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்
* பகல் முழுநேர, மாலை நேர வகுப்புகள்.

(சி/10054)

## ஏல விற்பனை

**வெற்றுப் பலகைப் பெட்டிகள்**
**கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.**

எமது திணைக்களத்தில் பாவனைக்குகந்த வெற்றுப் பலகைப் பெட்டிகள் ஒரு தொகை 94-12-23 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. எனவே அவற்றினை ஏலத்தில் பெற்றுக் கொள்ள விரும்புவோர், அன்றைய தினம் காலை 10-00 மணிக்கு கல்வித் திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். மேற்படி பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர், அன்றைய தினம் காலை 9-00 மணிக்கு களஞ்சியக் கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர், உடனடியாகப் பணத்தினை கணக்காளரிடம் செலுத்துவதுடன், அன்றைய தினமே அவற்றினைப் பொறுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

— யாழ். கல்விப் பணிப்பாளர்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
16 - 12 – 1994. (சி/10052)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 15 — 11 — 1979

மறைவு: 19 — 11 — 1994

செல்வி
**பிருந்தா சுந்தரலிங்கம்**
(யா/கொழும்புத்துறை இந்து ம. வித்தியாலய 10ஆம் ஆண்டு மாணவி)

பூத்துக் குலுங்கும் மலர்ச் சிரிப்பும்
புன்னகைக்கும் கன்னக் குழிவும்
கள்ளம், களங்கமில்லாத உன் பேச்சும்
கதை பல கூறும் உன் விழிகளும்
பூத்திருந்த போது உன் பூரிப்பும்
புகுத்தின மனதிலே கோடி மின்னல்கள்
புதுமலரே! அத்தனையும் கொண்டு
எங்கு போனாய்? எங்கு போனாய்........?
''பிருந்தா''வனமே பிதற்றுகின்றோம் பித்தராய்
உன் மலர் முகம் காண.

19-11-1994 அன்று எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட எம் செல்வமே! உன் மறைவை எம்மால் தாங்க முடியவில்லை. இனி எப்போது உன் குரலைக் கேட்போம். எப்போது உன்னைக் காண்போம் சின்னவளே! முடிவு காணாத் துயரில் வாடும் எம்மை காலத்தாலும் ஆற்ற முடியாது. எம் செல்வமே பிருந்தா! எம்முயிர் இருக்கும் வரை உன் நினைவு எம்மை விட்டகலாதம்மா!

எமது செல்வக் குழந்தை பிருந்தாவின் சுகவீன காலத்தில் கண்ணும் கருத்துமாக தமது கடமைக்கும் அப்பால் தூய அன்பையும் பாசத்தையும் காட்டிய யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் மற்றும் குழந்தையைக் கொழும்பு கொண்டு செல்ல உதவிய வைத்திய கலாநிதி சிவகுமார் அவர்களுக்கும், கொழும்பில் குழந்தையின் மறைவின் போது சகலவிதத்திலும் உதவிகள் செய்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மருதானை சாந்தி விடுதி உரிமையாளர் திரு. எஸ். சாந்தலிங்கம் அவர்களுக்கும், யாழ். வரும் போது உதவிகள் செய்தோருக்கும் 23-11-1994 அன்று நடைபெற்ற இறுதிக் கிரியைகளின் போது மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியும், அனுதாபமும் தெரிவித்த பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், உற்றார், உறவினர்கள், ஊர்மக்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– குடும்பத்தினர்.

சி. சுந்தரலிங்கம் (தந்தை),
60, [illegible] வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். [34243]

## தங்கச்சங்கிலி தவறிவிட்டது

17-12-94 சனிக்கிழமை இரவு கிளாலி கடற்கரையில் சிறிய உறையில் வைத்திருந்த ஒவ்வொரு பவுண் நிறையுடைய இரு சிங்கப்பூர் தங்கச் சங்கிலிகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கருணையுடன் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

D. திலீபன்,
3, அன்னசத்திர ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(34253)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

(சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்)

சகல வரியிறுப்பாளர்களுக்கும்

1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் 1995 ஆம் ஆண்டிற்கான

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1995 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின் படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டிற்கும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31 ஆம், ஏப்ரல் 30 ஆம், ஜூலை 31ஆம், அக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5 % கழிவும் வழங்கப்படும். 1 ஆம் கந்தாய வரி மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பும், 2 ஆம் கந்தாய வரி ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்பும், 3 ஆம் கந்தாயவரி செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும், 4 ஆம் கந்தாயவரி டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%உம், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%இம் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் 1994ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும், வியாபார உரிமைக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

1995ஆம் ஆண்டுக்குரிய வண்டி, துவிச்சக்கர வண்டி வரிகள் வருட ஆரம்பத்தில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
14-12-1994. (சி-10061)

## கண்ணீர் அஞ்சலி

**நல்லதம்பி தர்மராஜா**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

எமது கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர் நல்லதம்பி தர்மராஜா அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இத் தகவலை கழக உறுப்பினர்கள், அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அஞ்சல் தொலைத் தொடர்பு-
இளைப்பாறிய சேவையாளர்,
நலன்புரிக் கழகம்.

(34250)

## 31 -ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 15 — 12 — 1946

இறப்பு: 19 — 11 — 1994

**அமரர் இராசேந்திரம் ஸ்ரீபதி**

திதி: 19–12–1994

அன்பால், அறிவால், பண்பால் எங்களை எல்லாம் வழிநடத்தி, வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் கருணையே உயிர் மூச்செனவாழ்ந்து, கலைக்காகவே உயிர்நீத்தீர்கள்! நீங்கள் நடமாடிய வீட்டில் இன்று படமாகி விட்டீர்களே! என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், தாய்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள்.

அமுதா வைத்திய நிலையம்,
கட்டைப்பிராய். (34255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தடுப்புக் காவல் தமிழர்கள்

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறப்பட்டு, ஈழத்தமிழர்கள் பலர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர். இந்தியாவின் கொடிய சட்டங்களில் ஒன்றான தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்கள் இன்னமும் தடுப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இவர்களுக்கு எதிராக இன்னும் வழக்குத் தொடரப்படவில்லை.

ஈழத்தமிழர்கள் வெளிநாட்டவர்கள். அவர்களது மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தோ அல்லது இம்சிக்கப்படுவது குறித்தோ எவரும் கேள்வி எழுப்பமாட்டார்கள்; குரல் கொடுக்கமாட்டார்கள்; என்ற துணிவில் தமிழகத்து அரசு இவ்வாறு வருடக்கணக்காக அவர்களை விசாரணையும் இன்றிக் காவலில் வைத்திருக்கிறது!

ஈழத்தமிழர்களின் மனித உரிமைகளை மீறுவதிலும்—பறிப்பதிலும்— மற்றும் கொடூரமாக சித்திரவதைகள் செய்து இம்சிப்பதிலும் கைதேர்ந்தவை ஸ்ரீலங்கா அரசுகள்— அவற்றின் படைகள்.

தன்னைத் திருத்திய பின்னர் தான் பிறரைத் திருத்தத் துணிய வேண்டும். ஈழத்தமிழர்களின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகளை அப்பட்டமாகப் பறித்து அவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வந்த ஸ்ரீலங்கா, எந்த முகத்தோடு இந்திய அரசிடம்; இது விடயத்தில் ஆட்சேபிக்க முடியும்?

இந்தக் குறைபாட்டை அறிந்தே தமிழக—இந்திய— அரசு, விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் என்று கூறிக் கைது செய்த ஈழத் தமிழர்களை, வருடக் கணக்காகக் காவலில் வைத்து அவர்களது மனித உரிமைகளைப் பறித்துள்ளது எனலாம்.

இந்த அநியாயத்தை அம்பலப்படுத்திய பெருமை தமிழ்நாடு தேசிய இயக்கத்தைச் சேர்ந்த திரு. பீ. நெடுமாறனையே சாரும். சென்னைக்கு விஜயம் செய்த இந்தியாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு இவ் விடயத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.

திரு. நெடுமாறனின் மனுவை ஏற்று, ஐந்து வருடங்களாக காவலில் வாழும் ஈழத் தமிழர்களை விடுதலை செய்யுமாறு இந்திய மனித உரிமை ஆணைக்குழு இந்திய அரசுக்குச் சிபார்சு செய்யுமா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்களை இந்திய அரசு விடுதலை செய்யாவிட்டால், ஸ்ரீலங்காவின் புதிய அரசு, இது விடயம் குறித்து இந்திய அரசிடம் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டியதும், வழக்குத் தொடரவில்லையானால் சம்பந்தப்பட்டவர்களை விடுவித்து இங்கு திருப்பி அனுப்புமாறு கேட்பதும் அதன் தார்மீகக் கடமையாகும்.

மனித உரிமைகளைப் பேணுவது, தமிழர்களையும் நாட்டின் சம அந்தஸ்துள்ள பிரஜைகளாக்குவது என்பவற்றில் அக்கறை இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசினரும் காட்டிக் கொள்கின்றனர். அந்த அக்கறையை செயலில் காட்டுவதற்கு இது தக்க சந்தர்ப்பம் எனக் கருதுகிறோம்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சென்னையில் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை இந்தியா திருப்பி அனுப்பும் பட்சத்தில், அவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கழுகுக் கண்ணோடு பார்த்து, பாதுகாப்புப் படையினர் இங்கும் கைது செய்யாமல் இருக்க உத்தரவாதம் அளிப்பதும் அவசியம்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசின் காலத்தில் ''சந்தேகத்தின் பேரில்'' என்று கூறிக் கைது செய்யப்பட்ட தமிழர்கள் பலர் இங்கும் விசாரணை இன்றி நூற்றுக் கணக்கில் தடுப்புக் காவலில் இருக்கிறார்கள். அவர்களை விடுவிப்பது குறித்தும் இச்சந்தர்ப்பத்தில் புதிய அரசு சிந்தனை செய்யட்டும்.

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்க அரசாங்கம் நடவடிக்கை

## விரைவில் அறிவிப்பு வரும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, டிச. 19

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. இது பற்றிய அறிவிப்பு ஒன்றை அரசாங்கம் விரைவில் வெளியிடும்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

தம்மை கடந்த வியாழக்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுகள் நடத்திய ஈ. பி. டி. பி. குழுவினரிடம் முன்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு—கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களை தமது அரசாங்கம் நிச்சயம் நிறைவேற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு—கிழக்கு மக்களின் அத்தியாவசிய தேவைகளை தீர்த்து வைப்பதில் அரசு கூடிய கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்பேசும் மாணவர்கள் எதிர்நோக்கும் வசதியீனங்களை கரிசனையுடன் தாம் கவனிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

## அகதி மாணவனுக்கு சிறந்த பரீட்சை பெறுபேறு

மட்டக்களப்பு, டிச. 19

கடந்த நான்கு ஆண்டுகளாக அகதி முகாமில் தங்கியிருந்து பாடசாலை சென்றுவந்த மாணவர் ஒருவரே காரைதீவு விபுலானந்த மத்திய மகா வித்தியாலயத்தில் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

எஸ். இளங்கோ என்ற இம் மாணவர் உயிரியல் விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்தவர்.

மூன்று பாடங்களில் 'ஏ' சித்தியையும் ஒரு பாடத்தில் 'சி' சித்தியையும் இவர் பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மல்வத்தையைச் சேர்ந்த இம் மாணவர் கடந்த 1990 ஆம் ஆண்டு வன்செயலின் போது தந்தையைப் பறிகொடுத்தார். இவர்களது வீடும் அழிக்கப்பட்டது.

அந்த ஊரை விட்டுத் தமிழ் மக்கள் அனைவரும் அகதிகளாக இடம்பெயர்ந்ததை அடுத்து இம் மாணவரும் தனது தாயாருடன் இடம்பெயர்ந்தார்.

கடந்த நான்கு ஆண்டு காலமாக காரைதீவு அகதி முகாமிலேயே தங்கியிருந்து பாடசாலை சென்று வந்தார். [க]

## விசேட பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கத்தினரால் அமைக்கப்பட்ட விசேட முதலுதவிப் படையணிக்கு மூன்றாவதும் இறுதியுமான பயிற்சி வழங்கும் முகமாக நாளை முதல் 24 ஆம் திகதி வரைவிசேட பயிற்சிப்பாசறை ஒன்று நடைபெற உள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் இப்பயிற்சிப் பாசறையின் ஆரம்ப நாளான நாளை செவ்வாய்க்கிழமை காலை வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் தேசியக் கொடியை ஏற்றி பாசறையை ஆரம்பித்து வைப்பார். (இ-4)

## புலிகளின் குரல் வானொலியில்

**19 — 12 — 1994**

**திங்கள் இரவு**

- ★ 8-01 — தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- 8-20 — தாயகப் பாடல்கள்
- 8-30 — செய்திகள்
- 8-40 — தரிசனம்— கவிஞர் சோ. பத்மநாதனுடனான செவ்வி
- ★ 9-00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**20 — 12 — 1994**

**செவ்வாய் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 —தாயகப் பாடல்கள்
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## இம்மாத முற்பகுதிவரை

## யாழ்தேவி ரயிலில் நான்கு கொள்ளைச் சம்பவங்கள்

கொழும்பு, டிச. 19

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையே சேவையில் ஈடுபடும் யாழ்தேவி ரயிலில் கடந்த முதலாம் திகதியில் இருந்து — இரண்டு வாரங்களில்— நான்கு கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவங்களின்போது பயணிகளிடம் இருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பணமாக அபகரிக்கப்பட்டதாக பொலீஸ் தலைமையகத்துக்கு கிடைத்த முறைப்பாடுகளில் இருந்து தெரியவருகிறது.

யாழ்தேவி ரயிலில் பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் இருந்த வேளையிலே இக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இது பயணிகளுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது கொள்ளைச் சம்பவம் சென்ற மூன்றாம் திகதி வியாங்கொடையில் இடம்பெற்றது. இரகசியப் பொலீஸார் என்று கூறிக் கொண்ட சிலர் ஒரு பயணியிடம் 38 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்தனர்.

இரண்டாவது சம்பவத்தில் கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து வட பகுதிப் பயணி ஒருவரிடமிருந்த 54 ஆயிரம் ரூபா பணம் மூவரால் கொள்ளையிடப்பட்டது.

பொல்காவலையில் நடந்த மூன்றாவது சம்பவத்தில் 11 ஆயிரம் ரூபா பணத்தை இன்னொரு வடபகுதி பயணி இழந்தார்.

மாஹோ ரயில் நிலையத்தில் இடம்பெற்ற நான்காவது சம்பவத்தில் ஒரு பயணியிடம் இருந்து 5 ஆயிரம் ரூபா பணம் அபகரிக்கப்பட்டது. [எ]

## விஞ்ஞான பாட செயலமர்வு

கல்வித்திணைக்கள வலயம் 1 ஐச் சேர்ந்த க. பொ. த. உ / த) விஞ்ஞான பாட (ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறும்.

20 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரியில் விலங்கியல் செயலமர்வும் 21 ஆம் திகதி கனகரத்தினம் ம. ம. வி.யில் தாவரவியல் செயலமர்வுப் சம்பத்தரிசியார் கல்லூரியில் பௌதீகவியல் செயலமர்வும் இடம்பெறும். (க)

## இன்று

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். கல்வி வலயம் இரண்டின் முறைசாராக் கல்விப் போதனாசிரியர்கள், அதிபர்களுக்கான கருத்தரங்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 8-30 மணி தொடக்கம் பி.ப. 4-30 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கல்விக் கல்லூரி மாணவர்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 19

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் தெரிவாகி அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா செல்வதற்கான பயண ஒழுங்குகள் குறித்து கூட்டத்தில் கலந்துரையாடப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட மாணவர்களை அதில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாலர் ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். கல்வி வலயம் இரண்டின் முறைசாராக் கல்விப் பிரிவும், பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு —

நாளை செவ்வாய்க்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் —

நாளை மறுதினம் புதன்கிழமை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் — நடைபெறும். (அ)

## வெளிச்சம் வெளி வருகிறது

யாழ்ப்பாணம், டிச. 19

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்', — மார்கழி இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய மாவீரர் நாள் செய்தியுடன் பிரம்மஞானியின் ''அபத்தமும் அர்த்தமும்'' தொடர்கட்டுரை, இயல்வாணனின் சிறுகதை, அடேல் ஆனின் உடையாத விலங்குகள்,, தொடர் கட்டுரை, நா. யோகேந்திரநாதனுடனான நேர்காணல் சோ. கிருஷ்ணராசாவின் ''அமைப்பியல் வாதம்'' பற்றிய கட்டுரை ஆகியனவும் சிறப்புக் கவிதைகள் பலவும் இடம்பெற்றுள்ளன (ஒ)

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 19

வலிமேற்கு உதைபந்தாட்டச் சங்கம் யாழ் மருத்துவ பீட மைதானத்தில் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று ஞாயிறு நடைபெறவிருந்த இறுதியாட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக வலி. மேற்கு உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் திரு ம. பத்மநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-20)

## ஆலயங்களில்

நல்லூர் சிவன் கோயிலில் இன்று திங்கட்கிழமை அதிகாலை 1-30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி 4-30 மணிக்கு ஆருத்திர தர்சனமும் உள்வீதி தாண்டவமும் இடம்பெற்று, காலை 6 மணிக்கு நடேசர் தேரில் ஆரோகணித்து ரதோற்சவமும், 7 மணிக்கு திருவூடல் உற்சவமும் நடைபெறும்.

## பித்தன் மறைவு

மட்டக்களப்பு, டிச. 19

ஈழத்து முன்னோடி சிறுகதை எழுத்தாளரான ''பித்தன்'' (ஷா) மட்டக்களப்பில் காலமானார். (க)

# காண்பதற்கரிய ஆர்த்திரா தரிசனம்

கிழமைகளில் சோமவாரமும், நட்சத்திரங்களில் திருவாதிரையும் சிவபெருமானுக்கு உரியவை. நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் சிவபிரான். ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன போகங்களை (தனு: உடம்பு; கரணம்: இந்திரியம் முதலிய புறக் கருவிகளும், மனம் முதலிய உட்கருவிகளும்; புவனம்; வசிக்கும் உலகம்; போகம்: அனுபவிக்கப்படும் (பொருள்கள்) அருளி, ஐம்பெருந் தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவற்றைத் திருவிளையாட்டாக இடையறாது இயற்றுகிறார். இதையே ''காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி'' என்று பேசியுள்ளார் மணிவாசகப் பெருமான்.

திருவாதிரைத் திருவிழா பொதுவாகச் சிவபிரானுக்கு உரியதாயினும், அப் பெருமானுடைய மூர்த்தமாய்ச் சிதம்பரத்தில் கோயில் கொண்டுள்ள நடராஜ மூர்த்திக்கே அது மிகவும் பொருத்தமாக அமைவதாகக் கருதப்படுகிறது. ஏனெனில்—

சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் பிரணவ வடிவாக விளங்கி நாதாந்த நடனமும், ஐந்தெழுத்துச் சொரூபியாக இலங்கிப் பஞ்ச கிருத்தியமும் இயற்றுகிறார். சிதம்பரம் பஞ்சபூதங்களில் ஆகாயத் தலமாகவும், முத்தித் தலங்களுள் ''தரிசிக்க முத்தி தரும் தலம்'' ஆகவும் அமைந்துள்ளது. இது மட்டுமன்றி, விராட் புருடன் அமைப்புக் கொண்ட இந்த உலகத்துக்குச் சிதம்பரம் ''இருதயஸ்தானம்'' ஆகவும் விளங்குகிறது.

ஒவ்வொரு மாதமும் திருவாதிரை நட்சத்திரம் வருமாயினும் மார்கழி மாதம் சூரிய பகவான், வியாழபகவானின் ஆட்சி வீடாகிய தனுர் இராசியில் சஞ்சாரம்செய்யும் காலத்தில்வரும் திருவாதிரை நட்சத்திர தினம், நடராஜப் பெருமானுக்கு உரிய சிறந்ததாகக் கருதப்பட்டு வந்துள்ளது. சிவபிரானுக்கு ஆதிரையன் என்ற திருநாமமும் உண்டு.

விண்ணுலக சஞ்சாரிகளான தேவர்களுக்கு ஒருநாள் என்று கருதப்படுவது, மண்ணுலகவாசிகளான மானிடருக்கு ஒருவருட காலமாகும். இதன்படி தை மாதம் முதல் ஆனி மாதம் வரை உள்ள காலம் (உத்தராயனம்) தேவர்களுக்குப் பகல். ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரை உள்ள காலம் இரவு. இந்த வகையில் மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற் காலமாகிறது. புலரிக்காலம் என்று சொல்லப்படுகிற இந்த நேரத்தில் தேவர்கள், தேவாதிதேவராம் மகா தேவரை வழிபாடு செய்வர். தேவ தினமாகிய மார்கழியில் இறைவனை வழிபடுபவர்கள் பெறும் உயர்ந்த பயன்கள் பற்றிச் சிவாகமம் விரிவாக கூறுகிறது.

நடராஜப் பெருமானுக்கு ஆண்டுதோறும் [illegible] ஐந்து பெரிய விழாக்களும், பஞ்சகிருத்திய[illegible] நிற்பன. மார்கழித் திருவாதிரையைத் தீர்த்தவாரி தினமாகக் கொண்டு கொடியேற்றம் நடைபெறும். பஞ்சகிருத்தியங்களில் தீர்த்தவாரி அருளலைக் (அநுக்கிரகத்தைக்) குறிக்கும்.

தீர்த்தவாரியாவது இறைவனுடைய கருணை மயமான தண்ணீரிலே ஆன்மாக்கள் மூழ்கி, மலநீக்கம்பெற்று, சக்தி பதிந்து உய்வுபெறுவது. இதையே ' தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பங்கயப் பூம் புனல் ஆடேல்'' என்று கூறினார் மணிவாசகப் பெருமான்.

ஒன்பதாவது தின இரவு முழுவதும் அபிஷேகம் (ஆர்த்திரா அபிஷேகம்) நடைபெற்று, சூரிய உதயத்திற்கு முன்னர் நடராஜப் பெருமானின் பொலிவு நிறைந்த அருள் உருவை அடியார்கள் தரிசிப்பதே ''ஆர்த்திரா தரிசனம்'' என்று பேசப்படும் இந்த தரிசனம் கோடி புண்ணியம் சேர்க்கவல்லது என்ற நம்பிக்கை உண்டு.

இதனால் மாதங்களுள் மார்கழி சிறந்தது என்றும், அதில் வரும் திருவாதிரைத் திருவிழா மேலும் சிறந்தது என்றும், அக்காலத்தில் திரு[illegible] மிகவும் சிறந்தது என்றும் [illegible] ★

-மூளாய்-
-அருணாசலம்-

## வடக்கு-கிழக்கு

## ஆளுநராக சம்சுதீனை நியமிக்கக் கோரிக்கை

சம்மாந்துறை, டிச.19

வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சுதந்திரக்கட்சியின் கிழக்கு மாகாணப் பிரதம அமைப்பாளருமான ஐ. ஏ. எம். சம்சுதீனை நியமிக்குமாறு கிழக்கிலங்கையின் சில அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

## தொழில்நுட்ப டிப்ளோமா இவர்களும் தெரிவு

யாழ்ப்பாணம், டிச. 19

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் தேசிய தொழில் நுட்பப் பயிற்சிநெறிக்கு பின்வருவோரும் யாழ். மாவட்டத்திலிருந்து (யாழ்ப்பாண விலாசம் பதிவு செய்தவர்கள்) தெரிவாகியுள்ளனர்:

கே. ஆனந்தகிருஷ்ணன் (தொட்டிலடி, சங்கானை), பி. பிரியதர்ஷன் (ராணி வாசா, கீரிமலை றோட், பண்டத்தரிப்பு), கே. கஜமுகன், (எம். பி. சி. எஸ். லேன், நாவற்குழி, கைதடி). பி. ஜி. துஷ்யந்தி (36, சென் அன்னை ஒழுங்கை, யாழ்ப்பாணம்), வி. ஜெயவிஜிதன் (விக்ரோறியா கல்லூரி ஒழுங்கை, சுழிபுரம்), எம். வாசவன், (செல்வஜோதி ராஜாவீதி, நீர்வேலிவடக்கு), கே. சரவணபவன் (17A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி), எம். சதீஷ் (82, செம்மணிறோட், நாயன் மார்கட்டு), என். நந்தரூபன் (இலங்கை வங்கிக்கு அருகாமை, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்), வி. ரி. ஜெயதாஸ், (மூளாய் தெற்கு, சுழிபுரம்), எஸ். சிவன்ஜன் (சேர்ச் றோட், சங்கானை) ஆகியோர்.

இப் பரீட்சார்த்திகளுக்கு அடுத்த மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள தெரிவுப் பரீட்சை பற்றிய விவரம் இம் மாதம் 15ஆம் திகதிய உதயனில் வெளியாகியது.

## ★ யாழ். தேர்தல் வழக்கு

## வாக்களிப்பு நிலையங்கள் சில தொகுதிகளில் இல்லை

கொழும்பு, டிச. 19

மானிப்பாய், கோப்பாய் பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது போல வாக்களிப்பு நிலையங்கள் இருக்கவில்லை.

யாழ். மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியாக இருந்த டபிள்யு. டி. எல். பெரேரா இதை ஒப்புக்கொண்டார்.

யாழ். மாவட்டத் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் மனுதாரர்களில் ஒருவரான வத்தளையைச் சேர்ந்த ரி. சுபத்திரனின் சிரேஷ்ட சட்டத்தரணியான நிரஞ்சன் சின்னத்தம்பியின் குறுக்கு விசாரணையின் போதே அவர் இதை ஒப்புக்கொண்டார். (க)

## இவான்ஸ் குரே பிரிட்டனில் தஞ்சம்

கொழும்பு, டிச. 19

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு பொதுசனத் தொடர்பு அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. இவான்ஸ் குரே பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தகவல் தொடர்பு அதிகாரியாக பணிபுரிய வெளிநாட்டமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததை அடுத்து நாடு திரும்பும்படி உத்தரவிடப்பட்ட இலங்கை ராஜதந்திரிகளில் இவரும் ஒருவர் ஆவார்.

இவர் நாடு திரும்ப மறுத்ததுடன் தற்போது பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## இலங்கையை வட்டமிட்ட வல்லூறுகள் பறந்துவிட்டன

## நாடாளுமன்றில் றொனி டி மெல்

நத்தாருக்கு முன்பு யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு வரியை நீடிக்கும் சட்டத் திருத்த விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கையை வட்டமிட்ட பல வல்லூறுகளில் சில பறந்து விட்டன.

ஆயுதக் கொள்வனவுகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று கூறப்படுகிறது. ஆயுதக் கொள்வனவில் கணக்கு வழக்குகள் தெளிவாக இருக்க வேண்டும். இந்தியாவில் போபர்ஸ் ஆயுத பேர ஊழல் விவகாரத்தை நாம் மறந்து விடக்கூடாது ரஷ்ய ஆயுதக் கொள்வனவு குறித்து தகுந்த விசாரணையை ஏன் நடத்தக் கூடாது?

அடுத்த ஆண்டு பாதுகாப்புச் செலவு 2 ஆயிரத்து 700 கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. இதனை நாடு தாங்காது

பாதுகாப்பு வரி நீடிக்கக் கூடாது. சமாதானம் ஏற்பட்டால் இவ்வரியை நீக்கி விடலாம்''— என்று திரு. டி மெல் மேலும் தெரிவித்தார். (எ)

### காவலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரை விடுவிக்கும் உத்தரவை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெறுவதற்கு 2,3 மாதங்கள் தாமதமாவதாகவும் பதில் சட்டமா அதிபரிடம் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் கைதிகளை தாமதமின்றி விடுதலை செய்வதற்கேற்ற நடைமுறை ஒன்றை அரசு தயாரிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

### வன்னி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரசர் தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

ஆட்சேபனை மனுவில் தேர்தல் ஆணையாளர், வவுனியா மாவட்ட அரச அதிபர், மன்னார் அரச அதிபர், சட்டமா அதிபர் மற்றும் மாவட்டத்தின் 6 எம். பிக்களும் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டிருந்தனர்.

தேர்தல் விதிமுறைகளுக்கு அமைய தேர்தல் நடத்தப்படவில்லை. மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியாதபடி கொலை அச்சுறுத்தல்கள் இடம்பெற்றன. லஞ்சம் தலைவிரித்தாடியது. எனவே 6 எம். பிக்களும் தெரிவு செய்யப்பட்டமை செல்லுபடியாகாது என்று அறிவிக்கும்படி மனுவில் கோரப்பட்டிருந்தது. (எ)

### கடற்படை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் பழுதடைந்ததாகவும் இதனை அடுத்து அக்கரையிறக்கும் கப்பல் பொலீஸாருடன் கொழும்புக்கு திரும்பியது என்றும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### அரச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கொடுப்பனவுக்கு இணங்க ஏற்கனவே 12½சத வீத நட்ட ஈட்டைப் பெற்ற ஊழியர்கள் நிலுவையை பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக— 4989 ஆம் இலக்க நட்ட ஈட்டுக் கோவையில் மாற்றம் செய்யும்படி பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஸ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பு நடராசா

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், இணுவில் கிழக்கு அங்கிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பு நடராசா நேற்று காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் (சின்னத்தங்கச்சி) அன்புக் கணவரும், நவரத்தினராசா (சுவிஸ்), சிவலோகநாதன் (சுவிஸ்), சண்முகராசா, சிவகாமசுந்தரி, சிறீகந்தராசா, மகேஸ்வரி, சிறீரஞ்சன் (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பராணி, தங்கரத்தினம், பாமா, சாந்தினி, நாகநாதபிள்ளை, கந்தசாமி, குலசேகரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 - 12 - 94 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. சண்முகராசா
(மகன்)

இணுவில் கிழக்கு,
அங்கிலிப்பாய். (34254)

## இராஜமாணிக்கப்பத்தர் மகாலெட்சுமி

கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் பூனாறி லேன், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜமாணிக்கப்பத்தர் - மகாலெட்சுமி நேற்று (18 - 12 - 94) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராஜமாணிக்கப்பத்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நா. துரையப்பாபத்தரின் அன்பு மகளும், சிங்காரவேலு, குமாரவேல், சக்திவேல், பத்மநாதன், பாலசுந்தரி (இந்தியா), இராமகிருஸ்ணன் (இராமன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னம்மா (ராணி), அசோகா, தங்கம், நடராஜன், நவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராஜாமணி, ஞானம்மாள், கிருஷ்ணசாமி, வேணுகோபால், மகேஸ்வரி மற்றும் பஞ்சரெத்தினகோபால், இராஜகோபால், கோபாலசாமி, ஜெயலெட்சுமி, பாக்கியலெட்சுமி, வரதலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 18 - 12 - 94 இல் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
இ. இராமகிருஸ்ணன்
(இராமன்) (மகன்)

55, பூனாறி லேன்,
கொக்குவில். (34257)

## கனகசபை சிவராமலிங்கம் பத்தர்

[முன்னாள் கன்னாதிட்டி இராஜேஸ்வரி ஆபரண மாளிகை உரிமையாளர்]

கொக்குவில் கிழக்கு, புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த கனகசபை சிவராமலிங்கம் 18 - 12 - 1994 அன்று காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் கொக்குவில் நடராசா பத்தர் அவர்களின் அருமைச் சகோதரரும், வசந்தகோகிலம், ஜெயவதனி, விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சண்முகசுந்தரம் (பொறியியலாளர், நீர்ப்பாசனத்துறை) மச்சேந்திரகுமார் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்] ஆகியோரின் மாமனாரும் திருச்செல்வி, திருமலர், திருக்குமரன், திருவேணி, பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நடராசா பத்தர் (சகோதரன்),
(அப்பா).

இராஜேஸ்வரி மாளிகை,
புகையிரத நிலைய வீதி.
கொக்குவில் கிழக்கு. [34251]

## வயிரவப்பிள்ளை சதாசிவம்

துன்மலை, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வ. சதாசிவம் காலமானார். இவர் அருமைப்பிள்ளையின் அன்புக் கணவரும், விமலாதேவி, காலஞ்சென்ற தருமபுத்திரன், விசுமாபுத்திரன், கனகாதேவி, புஸ்பதேவி, பூபாலேந்திரன் (பிரான்ஸ்), இந்திராதேவி, பத்மாதேவி, பாலபுத்திரன் (3 ஆம் வருட யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லத்துரை (இளைப்பாறிய தபால் அதிபர், மலேசியா), த. கங்காதேவி, வி. செல்லமுத்து, தர்மலிங்கம், காலஞ்சென்ற சிவயோகேஸ்வரன், புவனேஸ்வரன், சிவசந்திரன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (19-12-94) திங்கள் டச்சு வீதி, கோப்பாய் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு. ப. 11-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பாற்பண்ணை வீதியிலுள்ள மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. விசுமாபுத்திரன்
(மகன்)

அம்மன் கோயிலடி,
டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு. (34252)

## தம்பையா திருஞானசம்பந்தர்

(ஜெயம்)

[ஜெயம் சைக்கிள் வேக்ஸ், K.K.S. வீதி, இணுவில்]

தம்பையா திருஞானசம்பந்தர் 16-12-94 அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா - இராசம்மா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற சின்னத்துரை - இரத்தினம் தம்பதிகளின் பெறாமகனும், காலஞ்சென்ற கந்தையா, பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி, கலாமதி ஆகியோரின் அன்புக் கணவரும், தயாமினி (ராதா), மாதவன், திலீபன், சாந்தி, றமணன், சாயிரேகா, சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், குபேரமூர்த்தியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-12-94) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. ஸ்ரீதரன்
[மருமகன்]

இணுவில் கிழக்கு,
இணுவில். [34256]

## அச்சுக்கோர்ப்பாளர்

முன் அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொழில் அனுபவம், எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்குக.

தூர இடங்களில் இருந்து வருவோர் விரும்பின் தங்குமிட வசதி ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

முழுமையான சுயவிவரங்களைத் தெரிவித்து 26 - 12 - 1994 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**உதயன் வெளியீட்டகம்,**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கணக்கியல்/கணக்காய்வு

# பயிற்சிநெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையால் நடத்தப்பட்டுவரும் கணக்கியல் / கணக்காய்வுப் பயிற்சிக் கல்லூரியின் அடுத்த கல்வியாண்டிற்கு (1995) தெரிவு செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் வரையறைகளுக்கிணங்க க. பொ. த. உயர்தரத் தேர்வில் வர்த்தகப் பிரிவில் தேறியவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**வரையறைகள்:**

01. பயிற்சிநெறி நிறைவடைந்த பின் நிதித்துறையால் செயற்படுத்தப்படும் தொழில் முயற்சிகளில் தகுந்த ஊதியத்தில் பொருத்தமான பணியில் அமர்த்தப்படுவர்.
02. ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்காவது பணியாற்ற வேண்டும்.
03. பயிற்சிக்காலத்தில் அல்லது ஐந்துஆண்டு பணிக்காலம் நிறைவடைவதன்முன் விலகவிரும்புவோர் பயிற்சிச் செலவை மீளளிக்க வேண்டும்.

★ வேண்டுகை அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கணக்கியல் / கணக்காய்வுப் பயிற்சிநெறி" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

★ பயிற்சிநெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடு செய்யப்படும்.

★ வேண்டுகை முடிவு நாள் **28- 12- 94**

அனுப்பவேண்டிய முகவரி:-

**வருவாய்ப் பகுதிச் செயலகம்,**
**நிதித்துறை,**
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி/10063)

## பருத்தித்துறை பிரதேசசபை

# கேள்வி அறிவித்தல்

**1995 ம் ஆண்டு பின்வரும் இறைச்சிக் கடைகளுக்கு குத்தகை கோரப்படுகின்றது**

1. மாணாண்டி மாட்டிறைச்சிக்கடை
2. தாளையடி மாட்டிறைச்சிக்கடை
3. கிராமக் கோடு ஆட்டிறைச்சிக்கடை
4. பொலிகண்டி ஆட்டிறைச்சிக்கடை

கேள்விப் படிவம் வழங்கல்—
27-12-94 ந் திகதி பி ப. 3 00 மணி வரை

கேள்விப் படிவம் ஏற்றல்—
28-12-94 ந் திகதி மதியம் 12 00 மணி

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆ. சிவசுவாமி
விசேட ஆணையாளர்
பருத்தித்துறை பிரதேசசபை.

பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.
15-12-1994 (சி/10062)

விசேட மலிவு விலை!

## திருமாட்டி

(புடைவைக் கடல்)
(சிமாட்டி)

நத்தார், புதுவருடப் பண்டிகைகளைச் சிறப்பிக்க பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட தரமான, புத்தம் புதிய புடைவைத் தினுசுகள் விசேட கழிவு விலையில் விற்பனையாகின்றன!

✶ யப்பான் சாறிகள்
✶ அமெரிக்கன் ஜோஜெட் சாறிகள்
✶ பூனம், பட்டர் ஃபிளை சாறிகள்
✶ சிபோன் சாறிகள்
✶ விஸ்கோஸ் துணிவகைகள்
✶ பாட்டி ஃபுறக்குகள்
✶ பிறின்டெட் - பிளேன் ரிகு. பலஸ் துணிகள்
✶ சித்தை, பப்பிளின்

மற்றும்

சூட்டிங் சேட்டிங், சேட், ரீசேட் வகைகள்
இன்னும் பலப்பல புடைவைத் தினுசுகளுக்கு

இன்றே நாடுங்கள்:

**திருமாட்டி** (புடைவைக் கடல்)
(சிமாட்டி)

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## கடற்கரையில் சடலம்

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள புதுக்குடியிருப்பு கடற்கரையில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம்கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## புத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த நால்வர் குழுவில் ஒருவர் உடல்நலம் குன்றியிருப்பதால் அவரின் இடத்துக்குப் புதியவர் ஒருவர் நியமிக்கப்படலாம் என தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு வரும் பாப்பரசரைத் தரிசிப்பதற்கு யாழ். கத்தோலிக்க மக்கள் பெரும் எண்ணிக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

அதனாலேயே வடக்கிற்கான — பாதுகாப்பான — பாதை ஒன்றைத் திறப்பது குறித்து அவசரம் காட்டப்படுவதாகவும் —

பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. [உ-ஐ-க-3-6]

## புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடத்திச் செல்ல முயற்சித்தனர் என்றும் —

அதேபோன்று அவர்கள் கொழும்பு விமான நிலையங்களுக்குள் ஊடுருவி விமானங்களை கடத்த வாய்ப்புள்ளது என்றும் —

ஆகவே பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வரும் வடபகுதி மக்களை தீவிர சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் தேசப்பிரேம பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்குமுவ நாலக ஹிமியினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தற்கொலைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீது மோதி அவரைப் படுகொலை செய்ய விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் தயாராக இருந்தார் என்றும்—

ஆனால் அன்றைய தினம் இராணுவத் தளபதி தாம் செல்லும் பாதையை கடைசி நிமிடத்தில் மாற்றி வேறு வழியால் சென்றதால் அவரின் படுகொலை தவிர்க்கப்பட்டது என்றும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே லீடர்" செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-ஐ-3)

## உள்ளூராட்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் போது தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் இம்மாதத்துடன் முடிவடைகின்றது. 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அப்போது பதவியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி பலசபைகளின் நிர்வாகங்களைக் கைப்பற்றியிருந்தது.

எனினும்—1993 மார்ச் மாதத்தில் கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா பகுதிகளில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படமாட்டா என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கேதீஸ்வரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்முட்டியை சுற்றி போடப்பட்டிருந்த தகரங்களை படையினர் அகற்றியதால் தேர் தூசிபடிந்து பொலிவிழந்து காணப்படுவதாகவும்— அண்மையில் ஆலயத்துக்கு சென்று திரும்பிய அரச அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(அ-3)

ROTARACT CLUB

யாழ். மிட்ரவுண்
றோட்டறக்ட் கழகம்
நடத்தும்

**கராட்டி** இறுதிப் போட்டி

இன்று மாலை
6 மணி முதல்
யாழ். பல்கலை
முன்மைதானம்
காணத்தவறாதீர்!

அன்பளிப்பு:
20/-, 50/-, 100/-
சிறுவர்களுக்கு 10/-
[சி-10065]

## மேற்றன் தேவை

யாழ். நகரில் உள்ள பெண்கள் விடுதிக்கு மேற்றன் ஒருவர் தேவை, தொழில் பார்க்கும் பெண்கள், மாணவிகள் தங்கும் விடுதியை பொறுப்பேற்று நடத்தக் கூடிய திறமையும் முன் அனுபவமும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
★ விண்ணப்ப முடிவு திகதி: **24 — 12 — 1994**

**இல: 735,**
**மே/பா உதயன்**
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10060)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி அன்னலிங்கம்

[சின்னத்துரை]

உடுவில் தெற்கு பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி மனோன்மணி அன்னலிங்கம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் திரு. மு. அன்னலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைராசா, திருமதி தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரியும், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த மு நடராசா, திருமதி பவளரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19-12-94 காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல்:
மு. அன்னலிங்கம்
[கணவர்]

பொற்பதி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. [34258]

## பொன்னம்பலம் நாகம்மா

விமன்காமம், கப்பன்கொடையைச் சேர்ந்த பொன்னம்பலம் நாகம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற இளையதம்பி பொன்னம்பலத்தின் மனைவியும், கமலேஸ்வரி, பாலசுந்தரம் [Jafferjee Brothers Colombo] ஆகியோரின் அன்புத் தாயாரும், விசாகப்பெருமாள், பத்மாவதி ஆகியோரின் அருமை மாமியாரும், முரளி, முகுந்தன். ரமணன், ரகுலன், நங்கை, துளசி, பதுமநிதி, மணிவண்ணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். இறுதிக் கிரியைகள் இன்று (திங்கள்) 19-12-94 ல் நந்தாவில் அம்மன் கோவிலடியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. விசாகப்பெருமாள்
[மருமகன்]

மே/பா R. இராசநாயகம்,
நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். (34259)

## குப்பிளானூர் சங்கரப்பிள்ளை துரையப்பா

குப்பிளானைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை துரையப்பா நேற்று மாலை நீர்வேலியில் சிவபதமடைந்தார்.

அன்னார் அன்னமுத்துவின் அன்புக் கணவரும், காலம்சென்றவர்களான செல்லையா, அழகம்மா, ஞானம்மா, தையல்முத்து, சின்னம்மா, செல்லமுத்து, மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, இராஜரட்ணம், செல்லையா, செல்லப்பா, இராசையா மற்றும் ஆறுமுகம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், துரை தியாகராசா (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்), திருமதி சரஸ்வதி, பாலசிங்கம் (கோண்டாவில் மேற்கு இந்து மகா வித்தியாலயம்), சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பராசக்தி (ஆசிரியை மங்கையர்க்கரசி பெண்கள் பாடசாலை), குமாரதாசன் (Senior Investigating Officer), நிரஞ்சனா, அனுஷியா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜீவபிரித்தினி (திறந்த பல்கலைக்கழக மாணவி - கொழும்பு), பிரேமினி (வேம்படி மகளிர் கல்லூரி), பவானி (சித்த-மருத்துவக் கல்லூரி மாணவி), ஞானகாந்தன் (மருத்துவபீட மாணவன் - கொழும்பு), உமாசங்கர் (மருத்துவபீட மாணவன் - கொழும்பு), மிதிலா, கோபி (இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்), லாவண்யா (கனடா), ஆரூரன் (கனடா), டாக்டர் கேதீஸ்வரன் (கொழும்பு அரசினர் மருத்துவமனை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-12-94) பிற்பகல் 2 மணிக்கு 'செந்தில்' நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
துரை தியாகராசா
(மகன்)

(சி/10064)

## கதிர்காமு கந்தையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று காலமானார்.

அன்னார் பரிமளம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும், கலாநிதி (ஆசிரியை), காலஞ்சென்ற தயாநிதி, கருணாநிதி, காலஞ்சென்ற கருணாகரன், காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜயமஹா, காலஞ்சென்ற சரவணமுத்து குகதாசன் அவர்களின் மாமனாரும், ஹர்சன், அனோஜா, தர்மஜா, தயாளன், டர்ஸன், தனுஷன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மீசாலை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் 19-12-94 இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
திருமதி கந்தையா பரிமளம்
(மனைவி)

(34260)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்றெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org